# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au

# ஆண்டிறுதிப் பரீட்சை 2023

ஆண்டு: 10 திகதி: 25 - 11 - 2023

நேரம்: 2 ½ மணித்தியாலங்கள்

ஆசிரியர் : திருமதி. மாலினி சோமாஸ்கந்தன்

மாணவர் பெயர்: ______________________________________________

| வினாக்கள் | வினா புள்ளி | பெற்ற புள்ளி |
|---|---|---|
| வினா 1 | 20 | |
| வினா 2 | 15 | |
| வினா 3 | 15 | |
| வினா 4 | 15 | |
| வினா 5 | 25 | |
| வினா 6 | 10 | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | |

**பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

எழுத்துக்களை முதன்முதலில் உருவாக்கிப் பயன்படுத்திய நாகரீகம் எகிப்திய நாகரீகம் என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்தாகும். எழுத்துக்கள் தோன்றுவதற்கு முன்னர் ஆதிகாலங்களில் மனிதன் தமது உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கு விலங்குகளை போல ஒலிகளையே பயன்படுத்தி உள்ளான். அதன் விளைவாகத்தான் அவனது சந்ததியினரான நாம் இன்றும் அதிக உணர்ச்சி வசப்படும் போது நம்மை அறியாமலேயே ஒலியை வெளிப்படுத்தி அதன் மூலம் நமது உணர்ச்சிகளை வெளிப்படுத்த முயல்கின்றோம். அதாவது, நாம் கோபப்படும் போதும், வலியால் துடிக்கும் போதும் நம்முள் இருந்து முதலில் வெளிவருவது ஆ, ஊ என்ற ஒலிகள் தானே தவிர வார்த்தைகள் பிறகே வெளி வருகின்றன.

மனிதன் ஒலிவடிவில் தமது உணர்வுகளை வெளிப்படுத்திக் கொண்டிருந்த காலத்திற்குப் பிறகு அவன் கற்களைக் கொண்டு மலையிலும் குகையிலும் வரிவடிவ சித்திரங்களாக தமது உணர்வுகளை வெளிப்படுத்த ஆரம்பித்துள்ளான். அதன் பயனாகவே நாம் இன்று பல இடங்களில் குகைச் சித்திரங்களை காண்கின்றோம். அக்குகைச் சித்திரங்களில் பெரும்பாலும் விலங்குகளின் தோற்றங்களும் அவன் பயன்படுத்திய ஆயுதங்களுமே இடம்பெற்றிருக்கும் காரணம் அன்று அவன் அறிந்திருந்தவை அனைத்தும் அவைகள் மட்டுமே. அன்றைய காலச்சூழலில் அவனது பயன்பாட்டிற்கென பெரிதாக எவ்வித இயந்திரங்களோ தொழில்நுட்ப சாதனங்களோ கண்டுபிடிக்கப் பட்டிருக்கவில்லை.

அதற்குப் பிறகே அவன் தனது முயற்சியினால் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கு எழுத்துக்களை கண்டுபிடித்து உள்ளான். அவன் கண்டுபிடித்துள்ள அக்கால எழுத்துக்களில் அதிகம் சுழித்தல் வடிவம் இல்லாமலேயே இருந்துள்ளன. இந்தக் காலகட்டங்களில் வாழ்ந்தோர் தாங்கள் நினைப்பவற்றை எழுதுவதற்கு பனை ஓலைகளையே பயன்படுத்தி உள்ளனர். அவர்கள் எழுதுவதற்கு வேண்டி பயன்படுத்தும் பனை ஓலைகள் நன்கு பக்குவப்படுத்தப்பட்டவையாக இருந்துள்ளன. மாறாக ஓலைகள் பக்குவப்படுத்தாத நிலையில் இருப்பின் அவற்றில் இரும்பு ஆணிகளைக் கொண்டு எழுதும் போது அவை கிழிந்து விடும். அது போலவே சுழித்தல் வடிவம் அதிகம் உள்ள எழுத்துக்களை அவற்றில் எழுதும்போது அவை கிழிந்து விடும். எனவே அக்கால எழுத்துக்கள் அதிக சுழித்தல் வடிவம் இல்லாத எழுத்துக்களாக இருந்துள்ளன.

அவ்வித எழுத்துக்களை நாம் இன்றும் கோவில் சுவர்களிலும் கல்வெட்டுக்களிலும் காணலாம். ஆனால் அவற்றை இக்காலத்தினர்களால் எளிதில் படித்து விட முடியாது. மொழி ஆய்வாளர்களால் மட்டுமே அக்கால எழுத்துக்களைப் படித்து அர்த்தம் புரிந்து கொண்டுவிட முடியும்.

ஆனால், இன்றோ காகிதமும் மையும் கண்டுபிடிக்கப்பட்டதற்குப் பிறகு எழுத்துக்களின் வடிவம் மாறி உள்ளது. மற்றும், தாங்கள் நினைப்பவற்றை எளிதில் பதிவு செய்து பாதுகாப்பதற்கு ஏற்ப காகிதங்களில் எழுத்துக்களை அச்சடிக்கும் முறையும் உருவாகி, பழக்கத்தில் உள்ளது. அதுமட்டுமல்லாமல் மென்பொருளில்

பதிவு செய்து பாதுகாக்கும் முறையும் இன்று நம்மிடையே வந்துவிட்டது. அதனால், ஒருவர் நாம் நினைப்பவற்றை காகிதங்களில் அச்சடித்து புத்தகங்களாகவோ அல்லது மென்பொருள்களாகவோ பத்திரப்படுத்தி எக்காலத்திலும் பயன்படுத்திக் கொள்ள முடிகின்றது.

1. அதிக உணர்ச்சி வசப்படும் போது நாம் ஒலியை முதலில் வெளிப்படுத்துவதற்கான காரணம் என்ன?

___

___

___

2. குகைச்சித்திரங்களில் விலங்குகளின் தோற்றங்களும் கருவிகளுமே அதிக இடம் பெற்றிருப்பதற்கான காரணம் யாது?

___

___

___

3. அக்கால எழுத்துக்களில் அதிகம் சுழித்தல் வடிவம் இல்லாதிருப்பதற்கான காரணங்கள் யாவை?

___

___

___

4. இக்காலத்தில் எழுத்துத் துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் யாவை?

___

___

___

5. இவ்வுரைப்பகுதிக்குப் பொருத்தமான தலைப்பை எழுதுக.

___

___

___

| வினா இல | 2 | புள்ளிகள் | 15 | பக்கம் | 4 |
| --- | --- | --- | --- | --- | --- |

**சிறு குறிப்பு எழுதுக.**

பின்வருவனை பற்றி 3 வசனங்களுக்கு குறையாமல் எழுதுக

நாட்டார் பாடல்கள்

உளுரு மணப்பாறை (Uluru Rock)

ஆடிக் கூழ்

சுற்றுச்சூழல்

பாரதியார்

| வினா இல | 3 | புள்ளிகள் | 15 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் விடயத்தை 80 சொற்களுக்குக் குறையாமல் தொடர்ந்து எழுதி நிறைவு செய்க**

எனது பெற்றோரும், அண்ணாவும், நானும் சிட்னியில் நடைபெற்ற (T20 அவுஸ்திரேலிய அணிக்கும்/ இந்திய அணிக்கும்) துடுப்பாட்டத்தை பார்ப்பதற்கு சிட்னி துடுப்பாட்ட மைதானத்திற்குச் சென்றோம்.

ஆட்டம் விறுவிறுப்பாக நடைபெற்றுக் கொண்டது. பார்வையாளர்களின் கரகோஷம் ஒருபுறம். அவ்வேளையில் அதிர்ஷ்ட இலாபச் சீட்டுகளை வாங்குமாறு அறிவிப்பாளர் தெரிவித்தார். அதில் முதல் பரிசு இந்தியா செல்வதற்கு இரண்டு பயணச் சீட்டுகள். மஞ்சள் பச்சை உடையில் இருந்த சிறுவர்கள் சீட்டுக்களை விற்பனை செய்தார்கள். எனது சட்டைப் பையில் ஐந்து வெள்ளிகள் ( $5 ) இருந்தன. நான் ஒரு அதிர்ஷ்ட இலாபச் சீட்டையும், அண்ணா ஒரு சீட்டையும் வாங்கினோம்.

ஆட்டத்தின் முடிவில் அதிர்ஷ்டச் சீட்டுக்களை குலுக்கி முதல் பரிசு பெற்ற சீட்டை எடுத்து அதன் இலக்கத்தை அறிவித்தனர். எனது சீட்டை எடுத்துப் பார்த்தேன். அண்ணாவும் எடுத்து பார்த்தார். என்ன அதிசயம்! என் கண்களை என்னால் நம்ப முடியவில்லை. அவர் வாசித்த இலக்கமும் எனது சீட்டு இலக்கமும் ஒன்றாக இருந்தன. எனக்கு முதல் பரிசு கிடைத்துள்ளது. மகிழ்ச்சியுடன் சென்று அறிவிப்பாளரிடம் எனது இலக்கத்தைக் காட்டினேன்.

| வினா இல | 4 | புள்ளிகள் | 15 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

**மின்னஞ்சல் எழுதுதல்**

உமது உள்ளூராட்சிப் பகுதிக்குட்பட்ட மிகப்பிரபலமான திருவள்ளுவர் விளையாட்டுக்கழகத் தலைவர் கழகத்தின் நிதிக்குழுவினருக்குத் தெரிவித்த முறைப்பாடுகள் இவையாகும்.

எமது விளையாட்டு மைதானம் மழைக்கால முடிவில் மேடும்பள்ளமுமாக இருப்பதால் பயன்படுத்துவதற்குச் சிரமமாக உள்ளது.

பெற்றோர் ஒருவர் வெப்ப காலத்தில் வெட்டுவதைத் தவிர வருடத்தில் பெரும்பான்மையான காலம் புல் வெட்டப்படுவதில்லை. பராமரிப்பில்லாத நிலையால் விளையாட்டு வீரர்கள் காயத்துக்குள்ளாகிறார்கள்.

எமது கூட்டங்களை நாம் ஏன் வேறு இடங்களில் கூட்ட வேண்டும்?

மைதானத்தில் உள்ள குடிநீர்வசதிக்கும் மலசலகூடக் கட்டடத்துக்கும் இடையில் உள்ள பகுதியில் பார்வையாளருக்கான இருக்கை வசதிகளோடு கூடிய கட்டடம் ஒன்றை ஏன் எமக்கென்று அமைக்கப்பெறக் கூடாது?

நாம் நமது கூட்டங்களையும் வெற்றிக் கொண்டாட்டங்களையும் நடத்த வசதியாக இருக்குமல்லவா?

மைதானத்தைப் பேணவோ புற்களைக் காயாமல் வைத்திருக்கவோ நீர் வசதி கிடையாது. இதனால் மழைஇல்லாத காலங்களில் நிலம் வரண்டு வெடித்து விடுவதாலும் புற்கள் இறந்துபோவதாலும் மைதானம் பல மாதங்களுக்குக்கூடப் பயன்படாது போய்விடுகிறது. காய்ந்து விடுவதனால் விளையாடுவோர் காயத்துக்கும் உள்ளாகிறார்கள்.

உள்ளூராட்சிமன்றம் எமது கழகத்திற்கு ஒதுக்கியுள்ள நிதியில் ஒரு பகுதியை இத்திருத்த வேலைகளுக்குப் பயன்படுத்தலாமே.

இந்த விளையாட்டுக்கழகத்தின் நிதிக்குழுச்செயலாளர் என்றவகையில் இம்முறைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு கழகத் தேவைகள் சிலவற்றையே பூர்த்திசெய்ய இயலும் என்பதையும் குறைபாடுகள் எல்லாவற்றையும் இச்சமயத்தில் சீர்திருத்த முடியாது என்பதையும் விளக்கி விளையாட்டுக்குழுத் தலைவருக்கு 120 சொற்களுக்குக் குறையாமல் ஒரு மின்னஞ்சல் எழுதுக. இம்மின்னஞ்சலை திருவள்ளுவர்@ஜிமெய்ல்.கொம் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

| வினா இல | 5 | புள்ளிகள் | 25 | பக்கம் | 10 |
| --- | --- | --- | --- | --- | --- |

**கட்டுரை எழுதுதல்**

**பின்வருவனவற்றுள் ஒன்றைப் பற்றி 200 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. சிட்னியில் இவ்வருடம் நடைபெற்ற தீபாவளிப் பண்டிகை
2. வீதி விபத்துகளைக் குறைப்பதற்கு அவுஸ்ரேலியா எடுத்து வரும் நடவடிக்கைகளை விளக்கி, தகவல்களைத் தந்து தமிழ்ப் பத்திரிகை ஒன்றிற்கு கட்டுரை எழுதுக.
3. அவுஸ்திரேலியா ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் தமிழ்ச் செய்தி வாசிப்பாளர் பதவிக்கு விண்ணப்பிக்க இருக்கிறீர். உம்மைப் பற்றியும் விண்ணபத்திற்கான காரணங்கள் பற்றியும் உமது திறமைகள் பற்றியும் அந்த நிறுவனத்திற்கு நீர் எவ்வாறு பங்களிப்பீர் என்பது பற்றியும் தெரிவித்து சொந்த விபரங்களை எழுதுக.

| வினா இல | 6 | புள்ளிகள் | 10 | பக்கம் | 12 |
|---|---|---|---|---|---|

**கேட்டுக் கிரகித்தல்**

**ஒலிபரப்பப்படும் உரைப்பகுதியைக் கேட்டு விடை எழுதுக.**

| வினாக்கள் | இங்கே குறிப்புகளை எடுக்கவும் |
|---|---|
| இந்த உரைப் பகுதியில் கூறப்பட்ட அரச கட்டளை என்ன?<br>3 புள்ளிகள்<br>__________<br>__________<br>எத்தனை நாட்களுக்கு மழை பெய்யும் என்று கூறப்பட்டுள்ளது? 1 புள்ளி<br>__________<br>அணை கட்டுவதற்கு எவரை வரும்படி அரசாங்கம் அழைக்கிறது? 1 புள்ளி<br>__________<br>இவ்வுரைப் பகுதியில் எவை தடை செய்யப்பட்டுள்ளது?<br>2 புள்ளிகள்<br>__________<br>__________<br>முதியோரை கூட்டி செல்வதற்கு எவரை அனுப்புவார்கள்?<br>1 புள்ளி<br>__________<br>பெண்கள்/ குழந்தைகளையும் தாய்மார்களையும் எங்கு செல்லும்படி கூறப்பட்டுள்ளது? 2 புள்ளிகள்<br>__________<br>__________ | |